# 5வது சிறுவழக்குகள் நீதிமன்றம்
# ( மோட்டார் வாகன விபத்து வழக்குகள் தீர்ப்பாயம், சென்னை)

# MCOP No. 4118/2023

| சாட்சியின் வரிசை எண் | எமசா2 |
|---|---|
| பெயர் | அஜின் பிரகாஷ் |
| க/த.பெயர் | ஞானபிரகாசம் |
| வயது | 29 |
| விலாசம் | சோழிங்கநல்லூர், காஞ்சிபுரம் |
| தொழில் | சட்ட மேலாளர் |

சாட்சி அமர்வு எழுத்தரால் உறுதி மொழி சட்டம் 1969ன் பிரிவு 6ன் படி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியம் இன்று 02.04.2026ல் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் 2ஆம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் சட்ட மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். என்னுடைய சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நான் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன். எங்கள் நிறுவனத்தில் வழங்கிய அதிகார கடிதம் எமசாஆ1, பர்மிட் எமசாஆ2, ஆய்வு செய்த மருத்துவ பில்கள் பற்றிய சான்றிதழ் எமசாஆ3, காப்பீடு நகல் எமசாஆ4.

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எமசா1 வட்டார போக்குவரத்து அதிகாரி அனுமதி சான்று இருப்பதாக சாட்சிம் அளிக்கும் பட்சத்தில் அதை நான்இல்லை என்று சொல்லமுடியாது என்றால் அது செல்லுபடியாகும் பகுதியை மட்டும் தான் நாங்கள் ஆட்சேபனை செய்கிறோம். எந்த பகுதியில் விபத்து நடந்தது என்பதை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் மசாஆ1 முதல் தகவல் அறிக்கையில் அந்த விவரம் உள்ளது. எங்கள் காப்பீட்டில் விதியின் படி ஏதேனும் விதிமீறல் இருக்கும் பட்சத்தில் **Pay and recovery** உள்ளது என்றால் அது இதற்கு பொருந்தாது. இந்த விபத்திற்கு காரணமான அஜாக்கிரதை குறித்து நான் நேரடியாக சொல்லமுடியாது என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவா் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.

**<u>5 வது நீதிபதி</u>**
**<u>சென்னை</u>**